( சுருக்கம் )

படிகள் - அகவிலைப்படி - 1-1-2010 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணை -- வெளியிடப்படுகிறது.

---

( செயலகக் கிளை )

(நிலையான) வாரியச் செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்.9 நாள் 9-4-2010.

பங்குனி மாதம் - 26ம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

T.N.E.B. ENGINEERS SANGAM ★ Regd. No: 124/MDS. (Recog)

படிக்கப்பட்டது:

1) தமிழ்நாடு மின்வாரிய ஆணை (நிலை) எண்:223 (தலைவர்) (செயலகக் கிளை) நாள் 21-11-2009.
2) தமிழ்நாடு மின்வாரிய ஆணை (நிலை) எண்:224 (தலைவர்) (செயலகக் கிளை) நாள் 21-11-2009.
3) அரசு ஆணை எண்: 96 நிதி (படிகள்) த் துறை. நாள் 27-3-2010.

******

செயல்முறைகள்:-

பார்வை 1 மற்றும் 2-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரிய ஊதிய மாற்ற ஆணையில் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 1-7-2009 முதல் அகவிலைப்படியினை அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 27 சதவீதம் என்ற வீதத்தில் வழங்கிட ஆணையிடப்பட்டது.

2. பார்வை 3-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01-01-2010 முதற்கொண்டு மாநில அரசுப் பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிட்டுள்ளது:-

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01-01-2010 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 35 சதவீதம் |

3. தமிழ் நாடு அரசின் இந்த ஆணையைப் பின்பற்றி, தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01-01-2010 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 35 சதவீதம் |

T.N.E.B. ENGINEERS SANGAM ★ Regd. No: 124/MDS. (Recd.)



4. மேற்கண்ட உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியானது, 1–1–2010 முதல் கணக்கிடப்பட்டு, 20–4–2010 அன்று ரொக்கமாக வழங்கப்படும்.

5. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தர ஊதியத்தையும், (Grade Pay) தனிப்பட்ட ஊதியத்தையும் (Personal Pay) சேர்த்துக்கொள்ள வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

6. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் அனைத்து முழுநேர அலுவலர்களுக்கும், அனுமதிக்கதக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கதக்கதல்ல.

7. இவ்வாரிய ஆணை பெறப்பட்டமைக்கான ஒப்புகையை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

(வாரிய ஆணையின்படி)

இரா. மதிவாணன்
செயலாளர்.

பெறுநர்:

அனைத்துத் தலைமைப் பொறியாளர்கள் / தமிழ்நாடு மின்சார வாரியம்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / (பொது) / தமிழ்நாடு மின்சார வாரியம்.
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள் / தமிழ்நாடு மின்சார வாரியம்..
அனைத்து துணைச் செயலாளர்கள்/ செயலகக் கிளை.
தலைமை உட்தணிக்கை அலுவலர் / தமிழ்நாடு மின்சார வாரியம்.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக் கிளை / தமிழ்நாடு மின்சார வாரியம்.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்) / த.நா.மி. வா.
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

நகல்:

தலைவரின் பார்வைக்கு.
உறுப்பினர் (பகிர்மானம்).
உறுப்பினர் (உற்பத்தி).
கூடுதல்காவல்துறை இயக்குநர் (விழிப்புப்பணி) / தமிழ் நாடு மின்சார வாரியம்.
செயலாளர் / தமிழ் நாடு மின்சார வாரியம்.
மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
இயக்குநர் / நிதி / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
இயக்குநர் / திட்டங்கள் / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
நிறுவன செயலாளர் / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
துணைச் செயலாளர் / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
சட்ட ஆலோசகர் / தமிழ் நாடு மின்சார வாரியம்.